முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

**மகான் தூர்வாசமுனிவர் அருளிய ஒளி சூட்சும நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

21.09.2018, வெள்ளிக்கிழமை

1. **மரணம் எண்ணி கலங்கும் மனிதா**
**மரணம் வெல்லும் வழிகாட்டலாக**
**காரண குரு காரிய குருவாக**
**கந்தவேலன் சூட்சும சக்தியாக வந்த**

2. வந்தநல் கலியுகத்தின் ஞானி
வாழும் சித்தன் ஆறுமுக அரங்கனை
சிந்தை வைக்க மரணம் விலகும்
சித்திகளெல்லாம் தானாக கைகூடும் என

3. கூடுமென ஒளி சூட்சும நூலை
கூறவந்தேன் **தூர்வாசமுனிவர் யானும்**
நாடவே **விளம்பி நங்கை திங்கள்**
**நலமுற பஞ்சதிகதி புகர் வாரம் தன்னில்**
**(விளம்பி வருடம் புரட்டாசி மாதம் 5ம் நாள் 21.09.2018, வெள்ளிக்கிழமை)**

4. தன்னிலே உலகோர் நலமுற உரைப்பேன்
தவறான ஒழுக்கம் சேர்மானம்
மண்ணுலகின் தருமநெறி மீறல்
மனைவி மக்கட்கு என தீங்கிழைத்து

5. இழைத்து வன்கொடுமை பாலியல்
இடரான அபகரிப்பு கொலை கொள்ளை
பிழைபட பதவி வழி லஞ்ச நெறி
பிறன்மனை பொருள் அபகரிப்பு

6. அபகரிப்பு நம்பிக்கை துரோகம்
ஆளுமையில் மக்கள் பசி பிணி அறியாமல்
அபகரிப்பு வரிகொடுமை அடிமையென
அநீதியாக நடக்கும் மனிதர்கள் எல்லா

7. எல்லோரும் ஆயுளிருக்க மரணம்
இடைகண்டம் அகால மரணம்
சொல்லவே கண்டழிய நேரும்
சுத்தநெறி ஏற்று தருமம் மீறா வண்ணம்

8. வண்ணமுடன் நித்ய தருமம் பூசை
வருவாயில் இயன்ற தருமம்
எண்ணமதில் தூய்மைபட நடந்து
இயம்பிடுவேன் தயவை கூட்டி வாழ

9. வாழ்வினில் பிறர் பசிபிணி விரட்டி
வள்ளலாய் வாழும் மனிதர்கள்
தாழ்விலா முருகன் மலரடி
தாள்பணிந்த மக்களெல்லாம்

10. மக்களெல்லாம் மரண பயமின்றி
மண்ணுலகில் பெருவாழ்வு காண்பர்
தேக்கமிலா ஞானவழி காட்டிடும்
தேசிகனார் வழி வருபவர்கள்

11. வருபவர்கள் மரணம் வென்று
வடிவேலன் துணைபட சிறப்பர்
குருவருள் பெற்றவர்கள் தானும்
குறையிலா ஆயுள் சிறந்து வாழ்வர் ஒளி சூட்சும நூல் முற்றே.

–சுபம்–

**முருகப்பெருமான் துணை**

**மகான் தூர்வாசமுனிவர் அருளிய ஒளி சூட்சும நூலின் சாரம் :**

பிறந்தால் இறந்துதான் ஆக வேண்டும். அந்த மரணம் நம்மை எப்போது வந்து தாக்குமோ என்று மரணத்தை எண்ணி கலங்கும் மனிதனே! கலங்காதே, மரணத்தை வென்று மரணமிலாப் பெருவாழ்வை பெற்றுத் தர மனிதகுலம் தழைக்கவே, ஞானகுலம் தழைக்கவே இவ்வுலகினில் இக்கலியுகத்தினில் காரணகுருவாய், காரியகுருவாய், சற்குருவாய் முருகப்பெருமானின் சூட்சும சக்தி வடிவமாக வந்துதித்திட்ட கலியுகத்தின் மகா ஞானி ஆறுமுக அரங்கமகா தேசிகனார் தம்மை கலியுக ஞானசித்தன் அரங்கனை அவரவரும் பயபக்தியுடன் பணிந்து சிந்தையில் வைத்து வணங்கிட அவரவரை அண்டிய மரணம் விலகும். சித்திகளெல்லாம் தானாகவே அரங்கன் அருளால் கைகூடும் என அற்புத மகா ஞானி அரங்கனின் புகழை உலகமெலாம் கூறியே உலகம் நலம் பெறவே **விளம்பி வருடம் புரட்டாசி மாதம் 5ம் நாள் 21.09.2018, வெள்ளிக்கிழமையான** இன்றைய தினமதனிலே தூர்வாசமுனிவர் யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் தூர்வாசமுனிவர்.

மனிதர்களே தர்மத்தின் வழியில் நீங்கள் செல்லாமல் நீதிநெறிப்படி நடக்காமல் தவறான ஒழுக்கம் வழி சென்றாலோ, தவறான பாதையில் சென்று தீயோர்களிடம் நட்பு கொண்டு தீமைகளை செய்திட்டாலோ, தருமத்தின் நெறிகளை மீறி நடந்தாலோ உங்களையே நம்பி வந்த மனைவியையும் மக்களையும் தவிக்கவிட்டு தீங்கிழைத்தாலோ, வன்கொடுமை செய்தாலோ பாலியல் பலாத்காரமோ, பாலியல் வன்கொடுமையோ செய்தாலோ, துன்பத்தையே தருகின்ற பிறர் சொத்தை அபகரிப்பு செய்யும் செயலை செய்தாலோ, கொலை, கொள்ளை செய்தாலோ, தமக்கு கிடைத்த அதிகாரத்தையும், பதவியையும் பயன்படுத்தி நீதிக்கு புறம்பாக சென்று லஞ்ச லாவண்யங்கள் செய்தாலோ, பதவியை பயன்படுத்தி பிறர் சொத்தையோ, பிறர் வசிக்கும் வீட்டையோ, பொருளையோ அபகரித்தாலோ, தம்மை நம்பிய மக்களுக்கு நம்பிக்கை துரோகம் செய்தாலோ, ஆட்சி செய்யும்போது தமது ஆட்சிக்குட்பட்ட பகுதியில் உள்ள மக்களின் பசியைக் கூட அறிய முடியாமல் போய், மக்கள்படும் துன்பத்தை உணராமல் அவர்களுக்கான நிதிகளை உரிமைகளை அபகரிப்பு செய்தாலோ, அவர்களை மேலும் துன்புறுத்தும்விதமாக வரிமேல் வரிபோட்டு வரிக்கொடுமைக்கு ஆளாக்கினாலோ, அவர்களை அடிமைகள் போல் நடத்தினாலே, இப்படிப்பட்ட பொல்லாத தீய செயல்களை அநீதியாக செய்து தீயவழியில் நடக்கின்ற மனிதர்கள்

எல்லாம் அவரவரின் ஆயுள் இருப்பு இருந்தாலும், அவர் செய்த பாவத்தினால், பாவவினை சூழ்ந்து இடைக்கண்டமோ, அகால மரணமோ சம்பவிக்கின்ற சூழல் உருவாகிவிடுமப்பா, அவர்களை உலகினின்று நீங்க நேரிடும்.

உயிர்க்கொலை தவிர்த்து, புலால் மறுத்து, சுத்த சைவ உணவினை மேற்கொண்டு தருமத்தினை மீறாமல் நித்திய கர்மங்களையும் நித்திய தர்மங்களை அவரவர் வருவாயில் இயன்ற அளவு தருமம் செய்வதுடன் தினம்தினம் மறவாமல் முற்றுப்பெற்ற முனிவர்களை, ஞானிகளை, சித்தர்களை, முருகப்பெருமானை பூஜைகள் செய்தும் வருவதுடன் அவரவரின் எண்ணத்திலே தூய்மையுடன் நடந்து உலக உயிர்களையும் தம்முயிர் போல் எண்ணி பிற உயிர்படும் துன்பத்தை உணர்ந்து அவ்வுயிர்கள் மேல் தயவு காட்டி ஜீவதயவுடன் வாழ்ந்திட வேண்டும்.

அவரவரும் வாழ்வினில் பிறருடைய பசிப்பிணியை போக்குவதை கடமையாக விரதமாக கொண்டு செயல்பட வேண்டும்.

**வாழ்வினில் பிறரின் பசியை போக்கி அன்னதானம் செய்து வள்ளலாய் வாழும் மனிதர்களும் ஞானமே வடிவாகிய ஆற்றல்மிக்க ஞானத்தலைவன் முருகப்பெருமானின் திருமலரடி தாள் பணிந்த மக்களும் மரணபயமின்றி வாழ்ந்து பெறுதற்கரிய பெரும் பேற்றை பெற்று பெருவாழ்வினை அடைந்து சிறப்பார்கள்.**

**தடையற்ற எளிமை ஞானம் வழங்கி உலகோர்க்கு ஞானவழிகாட்டி குருவாய் நின்று வழிநடத்திடும் ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் தூயநெறிக் கொள்கைகளை ஏற்றுக் கடைப்பிடித்து தேசிகனார் வழி வரும் மக்களெல்லாம் மரணத்தை வென்று முருகப்பெருமானின் துணையுடன் சிறப்பான வாழ்வை பெறுவார்கள்.**

**குருவருள் பெற்றவர்கள் எல்லாம் நீடிய ஆயுளைப் பெற்று ஆரோக்கியமான வாழ்வினை செல்வ செழிப்புடன் வாழ்ந்து சிறப்படைவார்கள்** என தமது ஒளி சூட்சும நூல் மூலம் உலகறிய உரைக்கின்றார் மகான் தூர்வாசமுனிவர்.

–சுபம்–

**நிறையுடைய வேலவன் நீள்புவி ஆண்டிட**
**குறையொன்றும் வாரா குடியும் சிறக்கும்.**

**பாரினில் சிறந்த பண்பாளன் வேலனை**
**மாரியும் சிறக்க மனமுவந்து அருள்வானே.**

**– மகான் ஆறுமுக அரங்கமகாதேசிகர்.**